# செந்தமிழ்


பகுதி : 8
தொகுதி : 97
ஆகஸ்ட் 2003

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2034




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
தோற்றம் 21.03.1867

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-9-1901 THE MADURAI TAMIL SANGAM


ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்

பகுதி : 8
தொகுதி : 97
ஆகஸ்ட் 2003

(தோற்றம் 1903)

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2034



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
தோற்றம் 21.03.1867

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-0-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்,

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ.,எம்.ஃபில்,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்


1. இதழ்மணம் 267

2. மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தோற்றம் 269
*இரா.இளங்குமரன்*

3. திருவெம்பாவை - 15 272
*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

4. பிறனில் விழையாமை 275
*முனைவர் கி.இளங்கோவன்*

5. தாய்மொழிப்பாடத்தில் தரமான கலைத்திட்டம் தேவை 281
*முனைவர் க.குழந்தைவேல் பன்னீர்செல்வம்*

6. பரணர் பாத்திறன் (புறநானூறு) 284
*முனைவர் பெ.சுயம்பு*

7. அரியகுறட்பாக்களும் உரிய பொருளும் 296
*பேரறிஞர் நா.பாலுசாமி*

8. ஆறுமுகநாவலரின் பதிப்புப்பணி 301
*ஆய்வாளர். வெ.இராமச்சந்திரன்*

# இதழ்மணம்

மதுரைத் தமிழ்ச்சங்கம் என்பது தமிழ் கூறும் நல்லுலகின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாகும். தமிழ்மக்கள் வரலாற்றுக் காலம் தொடங்கித் தங்கள் மொழி, இலக்கியம், பண்பாடு, கலை, இயல், இசை, நாடகம் எனப்பல்துறைப் பொருளையும் பேணிக்காக்கச் சங்கம் அமைத்து வளர்த்து வந்தனர். அதனால் தமிழ்மொழி உயர்தனிச்செம்மொழி என்ற தகுதியொடு காலத்தைவென்று நிற்கிறது.

அத்தகைய அரிய சிறப்புக்குரிய மொழி சற்று ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளில் பேணுவாரின்றி வன்பாற்கண் வற்றல் மரம் போல் தவித்தது. புலவரைப் பேணும் கல்வி கேள்வி விரும்பும் மக்கள் இன்மையால் புலவர்கள் தம் அறிவுச் செல்வத்தை கேட்டு இன்புறும் மக்களும் புரவலரும் இன்றிவாடினர். அதனால் கல்வி,அறிவு,சிந்தனை வளர்ச்சியில் ஒரு தேக்கநிலை ஏற்பட்டது. அறிவுச் செல்வம் அழிந்து வரும் நிலை ஏற்பட்டது. அறிவை மக்களுக்கும் அடுத்த தலைமுறைக்கும் தக்க வைத்து வழங்கும் மொழி சிதிலம் அடையும் நிலைக்குத் தள்ளப்பட்டது.

இத்தகைய வரலாற்றுத் தேக்க நிலையில், அறியாமை நிறைந்த இருண்மையில் தமிழ்கூறும் உலகம் தமிழறிவின்றி சிதைந்த காலக்கட்டத்தில் கல்வியாளர்களைப்பேணி அறிவுச்செல்வத்தை மீட்டுஎடுக்கும் அறிய பணியை மதுரைத் தமிழ்ச் சங்கம் செப்பமுறச் செய்தது. வரலாற்றினைக் கூர்த்து படித்த அறிஞர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின்தோற்றம் எத்தகைய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்து வழிபடுவர். அத்தகைய முயற்சியில் முனைந்து செயல்பட்ட சேதுபதி அரச குடும்பத்தினரையும் அவர்களுக்குத்துணை நின்ற பரந்த தமிழகம் ஈழம் முழுதும் வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்கள் புரவலர்தம் முற்போக்குச் சிந்தனையையும் எளிதில் புறக்கணிக்கத் துணியார்.

இந்தப் பின்புலத்தின் வேதனையின் வெளிக்கொணர்வே சேதுகுடி சாத்தனிக்கிராமத்துப் புலவர் அப்துல்காதிறு இராவுத்தர் எழுதிய மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியம். இந்நூல் குறித்துப் புலவர் இரா.இளங்குமரன் அவர்கள் எழுதியுள்ள கட்டுரை கருத்துக்காகவும் நடைக்காகவும் பன்முறை படித்து

இன்புறத்தக்கது. புலவர் பெருமானாரைச்சந்தித்தபோது செந்தமிழ் இதழில் திங்கள் தோறும் தொடர்ந்து எழுதுவதாக கூறியுள்ளார்கள். நம் வாசகர்களுக்குப் புதுவரவாகும். கற்று இன்புறுக.

பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் திருவெம்பாவை பதினைந்தாம் திருப்பாட்டுக்கு விளக்கம் அளித்துளார்கள். இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள உறவு அன்பின் ஐந்திணை அல்ல; பெருந்திணை என விளக்கம் அளித்து அதனை மேற்கோள்களுடன் விளக்கியுள்ள திறம் கற்று இன்புறற்பாலது.

முனைவர் கி.இளங்கோவன் அவர்கள் "பிறனில் விழையாமை" பேராண்மை என்பதை விளக்கும் நெறி ஆய்வுநெறி கைவந்த கலைஞர் என்பதைக்காட்டும். சொல்லும் திறத்தால் தெரிந்த செய்தியைச் சோர்வின்றிப் படிக்கவைக்கிறார். ஒழுக்கம் உடையார் வாய்ச்சொல் இன்பம்தரும். கற்க

முனைவர் க.குழந்தைவேல் பன்னீர் செல்வம் தாய்மொழிப் பாடத்திட்டத்தில் தரமான கலைத்திட்டம் தேவை என்பதை விளக்கி எழுதியுள்ள கட்டுரை கல்வித்துறையில் உள்ள அறிஞர்களின் பார்வைக்குரியதாகும். வளர்ந்து வரும் கலை அறிவியல் வளர்ச்சிக்கு ஏற்ப நம் கல்வித்திட்டங்களும் மாற்றங்களுக்குரியதென்பது கல்வியாளர் சிந்தனைக் குரியதாகும்.

பேராசிரியர் முனைவர் பெ.சுயம்பு நம் வாசகர்களுக்கு இலக்கணக் கட்டுரையின் வாயிலாகத் தலைசிறந்த இலக்கண ஆசிரியராக அறிமுகம் உடையவர். ஆழங்கால்பட்ட இலக்கணப் பகிர்வுகளைப் பகிர்ந்துகொண்ட நம் வாசகரிடையே இவ்விதழில் புறநானூற்றில் பரணர் குறித்த விரிவான கட்டுரை ஒன்று எழுதுகிறார்கள். ஆய்வுநெறி நின்று பரணர் பாநலம் குறித்துப் பேராசிரியர் தரும் செய்திகள் இருண்மை நீக்கி ஒளி காட்டுகிறது.

கழுகுமலை திருவள்ளுவர் கழகத்தலைவர் திரு.ச.சண்முகம், தலைமை ஆசிரியர் திரு.வை.பூ.சோமசுந்தரம், திரு.தேவகாளை ஆனந்தன் ஆகிய மூவரும் செந்தமிழ் வாசகர் வட்டத்தில் இணைந்துள்ளார்கள். தமிழ் வளர்க்கும் கழுகுமலை திருவள்ளுவர்கழகம் செந்தமிழ் இதழ் வளர்ச்சியில் பங்குகொண்டு தன்னை இணைத்தக்கொள்வது பெருமகிழ்ச்சி தருகிறது. திங்கள்தோறும் செந்தமிழ் இதழ் உறுப்பினர் பெருகி வர ஆர்வலர்கள் ஒல்லும் வகை உதவ வேண்டுகின்றேன்.

# மதுரை நான்காம் தமிழ்ச்சங்கத் தோற்றம்

இரா.இளங்குமரன்

மதுரை மாநகரில் 1901 ஆம் ஆண்டு தமிழ்ச்சங்கம் ஒன்றனைச் சேதுநாட்டுமன்னர் பாற்கர சேதுபதி அவர்கள் துணையுடன் வள்ளல் பொன். பாண்டித்துரையார் அவர்கள் தோற்றுவித்தனர்.

பாண்டித்துரையார் இளந்தைப்பெயர் உக்கிரபாண்டியன் என்பது. அப்பெயரையும் தமிழ்ச்சங்கம் தோற்றுவித்த பெருமையையும் எண்ணிய புலவர் பெருமக்கள் மதுரையில் முன்னிருந்த சங்கங்கள் மூன்றன்பின் தோன்றியமை கொண்டு நான்காம் சங்கம் என்று பெரும் பெயர் சூட்டினர்.

நான்கு என்று 'எண்ணிக்கை'யால் தோன்ற ஏவியது தமிழ்ச்சங்கம் என்னும் பெயரீடு மட்டுமன்று, பழந்தமிழ்ச் சங்கங்கள் இருந்த மதுரையில் தோன்றியது ஒன்று என்பது. மற்றொன்று மூன்றாம் சங்கத்திருந்த பாண்டியன் உக்கிரப் பெருவழுதியின் பெயர் கொண்ட - உக்கிரபாண்டியன் எனப் பெயர் கொண்ட - பாண்டித்துரை தோற்றுவித்தது. இன்னொன்று சேதுபதி முதலிய அரசர்களும் வள்ளல்பெருமக்களும் நாடனாவிய புகழ்வாய்ந்த தமிழ்ச்சான்றோர்களும் ஒருங்கு கூடிச்செய்தது. பிறிதொன்று, பழஞ்சங்கங்கள் செய்த பணிகள் ஒப்பப்பல துறைப்பணிகள் செய்ததுடன், அச்சங்கங்கள் செய்தற்கு வாயாத பணிகள் சிலவும் செய்ய வாய்த்தது என்பனவாம்.

சங்கம் தோன்றிய நாளிலேயே, எழுநிலை மாடமாக எழிலிதோய ஓங்கி நின்று, "ஈண்டு நின்றோர்க்கும் தோன்றும்; சிறுவரை சென்று நின்றோர்க்கும் தோன்றும்" என்னும் மலைபோல் ஆகாமல், தமிழ்கூறும் உலகமாகிய - தமிழர்வாழும் பரப்பெல்லாம் கண்டும் கேட்டும் கவிந்தும் கனிந்தும் துய்க்கப் பெறும் குறிஞ்சித்தேன் தேட்டாகத் திகழ்ந்தது.

அவ்வெழுநிலை மாடங்கள்: க.வித்துவக்கழகம், உ.சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை ௩.பாண்டியன் புத்தகசாலை, ச.முத்திராசாலை(அச்சகம்), ரு.செந்தமிழ்ப்பத்திரிகை கா.

செந்தமிழ்ப்பரிட்சை, எ.தொன்னூலாராய்ச்சி என்பன.

சங்கம் தோன்றிய நாளில் அது குறித்துத் தோன்றிய நூல்கள் மூன்று ஆயின. அவற்றுள் ஒன்று 'மதுரைத் தமிழ்ச்சங்க மான்மியம்' என்பது. இளையாங்குடியை அடுத்த சோதுகுடி சாத்தனிக் கிராமத்தவரும், மதுரைத் தமிழ்ச்சங்க வித்வான்களுள் ஒருவரும் ஆகிய அப்துல் காதிறு இராவுத்தர் என்பார் இயற்றியது அது.

இந்நூலுக்குப் பெரும் பேராசிரியர் உ.வே.சாமிநாதையர் முதலாகப் பதினாறு பேர்கள் சாற்றுக்கவிகள் பாடியுள்ளனர். சாறு என்பது விழா; இங்கே அரங்கேற்று விழா, அரங்கேற்று விழாவில் பாடிவழங்கிய கவிகள் சாற்றுக் கவிகள் என்பதாம்.

இந்நூல் 1907 இல் மதுரை விவேகபாநு முத்திராசாலையில் பதிப்பிடப் பெற்றுள்ளது. 110 பாடல்களைக் கொண்டுள்ளது.

பழநாள் முச்சங்கங்களைப் பற்றி 39 பாடல்களும் 40 ஆம் பாடல்முதல் நான்காம் சங்கம் பற்றியும் கூறி நூல் நிறைகின்றது.

மகான்மியம் என்னும் வடசொல் தமிழியல் கருதி 'மான்மியம்' என வழங்கப்பட்டுள்ளது. பெருமைக்குரிய வரலாறு என்பது மான்மியம் என்பதன் பொருளாகும்.

மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் தோற்றுவிக்க நேர்ந்த காலநிலையை உருகிஉருகி இந்நூலாசிரியர் கூறுகிறார்.

புலமைத் தொழிலே தொழிலாகக் கொண்ட புலவர்கள் தாயிலாச் சேய் தவிக்கும் தவிப்புப்போல் தவித்தனர்.

பசி என்னும் தீப்பிணிக்கு ஆட்பட்ட புலவர்கள், இத்தீயை ஆற்றிக் காப்பார் எவரே எவரே என்று ஏங்கி உளம் நொந்தனர்.

சுற்றிவளைத்து எரியும் தீயினிடையே அலமரும் கலைமான்போல், தாவித்திசை தோறும் தேடிச் சென்று கொடுப்பாரும் அரவணைப்பாரும் இல்லாமையால், தம் வாக்கையும் பயனற இழந்தவரானார்; தம் அறிவையும் இழந்தவரானார்.

"தாயி ழந்ததால் அலமரும் மகவெனச் சாம்பி
நோயு ழந்தெவர் புரப்பரென் றகமிக நொந்து
தீயு ழந்தகான் கலையெனத் திசைதொறும் சென்று
வாயி ழந்தனர் மதியிழந் தனர்கவி வாணர்" (36)

'புலமையுடையவரே' பாடுங்கள் என்று சொல்பவர் எவரும் இல்லை. 'நம் முந்தையர் செல்வங்களாகிய நூல்களின் பொருளைத் தேடுக' என்று கூறுபவரும் எவரும் இல்லை. ஒருகால் அப்படி நூற்பொருளைத்தேடிக் கொண்டுவந்து எடுத்துக் கூறினாலும், அதனையும் ஆர்வம் உடையவராகக் கூடிச் சேர்ந்து கேட்பவரும் இல்லை. 'தமிழ்மொழி தன் நிலைகுலைகின்றதே என் செய்வேம்' என வாடிவருந்தினர் புலமையர். தெளிவுமிக்க நாவலரும் பாவலரும் ஆகிய அவர்கள், செய்வது அறியாமல் மயங்கிக் கிடந்தனர்.

"பாடு கென்றுரைப் பவரிலை; பண்டைநூற் பொருளை
நாடு கென்றுரைப் பவரிலை; நவில்கினும் உவந்து
கூடி நின்றுகேட் பவரிலை; தமிழ்நிலை குலைய
வாடி நொந்தனர் மருண்டனர் தெருண்டசொல் வாணர்" (37)

நீர்வளம் நிலவளம்.ஆகியவை பொருந்திய சேரநாடு, சோழநாடு, பாண்டிநாடு என்னும் மூன்று நாடுகளிலும் நீரில் தோன்றும் குமிழி போன்றது செல்வம் என்று சொல்லப்பட்ட நிலையாச் செல்வம் உடையவர்கள் சிலர் இருந்தனர். அவர்கள் கூட்டத்தில் தமிழ் என்னும் அழியாச் செல்வத்தை யாரோ விரும்புவார் என்று இடம் இடமாகவும் ஆள் ஆளாகவும் புலமைச்செல்வர்கள் அலைந்தனர். பொருட்செல்வமே செல்வமெனக்கொண்ட அவர்கள் அமிழ்தனைய அத்தமிழ்ப் பாக்களைக் கேளாமையால், புலவர்கள் உள்ளம் புகைந்து சோர்வுற்றனர்.

"இமிழ்பு னற்றட வளங்கெழு மும்மைநாட் டிசைநீர்க்
குமிழி யொத்ததாம் செல்வமீக் கொண்டவர் குழாத்துள்
தமிழ்வி ருப்பினார் எவரெனத் தலைத்தலை சார்ந்தே
அமிழ்த டுத்தபாச் சொற்றலைந் துளம்புகைந் தயர்ந்தார்" (38)

– **இத்தகு நிலையிலேதான் மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் தோன்றுவதாயிற்று.**

(தொடரும்)

# திருவெம்பாவை 15

*பேராசிரியர் சுப.அண்ணாமலை*

**பித்தானாள்**

பக்தர் நிலையும் பித்தர் நிலையும் ஒன்றே. காதல் கொண்ட கன்னியர் நிலையும் அதுவே. காளத்திக் குன்றின் உச்சியில் கோயில் கொண்டமையால் 'குடுமித் தேவர்' என வழங்கப்பெற்ற சிவபெருமானைக் கண்டவுடன், திண்ணனார் தம்வயமிழந்தார். தாம் வேடர் என்பதையும், தம்மூர்க்குத் திரும்பவேண்டும் என்பதையும் மறந்தார். உடன்வந்த துணைவர்கள், "தேவுமால் கொண்டான் இவன்" (இவன் தெய்வப்பித்துக் கொண்டான்) என்றனர்.

மாணிக்கவாசகர், " உன்கோயில் வாயிலில் பிச்சனாக்கினாய்" என்று இறைவனிடம் முறையிடுகின்றார் பக்திநெறியின் முதிர்ந்த நிலையாகிய சன்மார்க்கத்தில், பக்தருக்கு உண்டாகும் முறுகிய அன்பும், பித்தும், காதலும் ஒரு தன்மையனவே.

"மிக்க காமத்துமிடல்" என்பது, அகப்பொருளில், பெருந்திணைக்குரிய உணர்ச்சிகளுள் ஒன்று. மிகுந்த அன்பின் காரணமாக, தலைவன் தலைவியர்க்கு நிகழும் ஒத்த அன்பிலிருந்து மாறுபடுவது, "மிக்க காமத்து மிடல்" (அதிகமான காமத்தால், மாறுபடுவது) என்பது இதன் பொருள். நடுவண் ஐந்திணை எனப்படும். ஒத்த அன்பில் "பித்துக்கொள்ளுதல்" இல்லை.

மாணிக்கவாசகர் தமது இறையன்பு பித்தாகிய நிலையில், அதனைக் காதலிகொள்ளும் பித்த நிலையாகக் கொண்டு, திருவெம்பாவையில் ஒரு பாடல் பாடுகின்றார். இது பெருந்திணைக்குரிய மெய்ப்பாடுகளில், 'கலக்கம்' என்பதன்பாற்படும். "பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள், பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்" எனத் திருநாவுக்கரசர் பாடுவதும், இந்நிலையையே ஆகும்.

திருவெம்பாவைப் பாடலில், மாணிக்கவாசகர் காட்டும் பெண்

சிவப்பித்துக் கொண்டாள், பித்தர் நிலை, உலகியலிற்கு மாறாகவே இருக்கும். பிறர் சிரித்தால், அவர் அழுவார் பிறர் அழுதால் அவர் சிரிப்பார். தனியே இருப்பார். யாரோடும் பேசார். தனக்குத் தாமே பேசிக்கொள்வார்.

இத்திருவெம்பாவைப் பெண்ணும் அவ்வாறே. அவள் யாருடனும், எதுவும் பேசவில்லை எப்பொழுதோ ஒருமுறை வாய்திறப்பாள். "அவள் பேச்சு என்னவாக இருக்கம் தெரியுமா." என்று அவள் தோழியொருத்தி, மற்றொருத்தியிடம் வினவுகின்றாள். அவளே விடையும் சொல்லுகின்றாள். "அடியே! இத்துணை நாள் பேசவில்லை. நேற்றுத்தான் பேசினாள். "எம்பெருமானே" என்று உணர்ச்சி மீதூரக் கூவினாள் அதில் பேரானந்தம் கொண்டாள் போலும்" சிரித்தாள்; உடனே அவள் கண்ணிலிருந்து, கண்ணீர் தாரைதாரையாகப் பெருகியது. சிறிதுநேரம் சும்மா இருந்தாள். அவள் கண்கள் பாதி மூடியவாறு மேல்நோக்கியிருந்தன. மனக்கண்ணால் தன் காதலனைக் கண்டாள்போலும்! இத்துணை நாளும் அவனைக்காணாத ஏக்கம் தணிந்தது போன்ற ஆறுதல், அவள் முகத்தில் நிலவியது.

யாரேனும் ஒரு பெரியோர் வந்தால் 'அவரைக்காணவேண்டும். வேண்டிக்கொள்ளவேண்டும்' என்று எண்ணியிருப்பவன் ஒருவன் சட்டென எழுந்து, நெஞ்சகம் நிலந்தொட வணங்குவானல்லனோ? அதுபோல, அவள் சட்டென எழுந்து, அங்கு யாரும் இல்லை என்பதை அறியாள் போலத் தரையில் வீழ்ந்து வணங்கினாள்.

அவள் நம்மோடு எத்தெய்வத்தின் கோயிலுக்கும் வந்ததில்லை. சிவபெருமானை யன்றி, மற்ற தெய்வத்தை வணங்குவதில்லை என்பதை நாமறிவோம். கற்புடைய கன்னியர், அச் செயலைப் "பீடன்று" எனத் தள்ளுவர்.

அது மட்டுமில்லையடி, சிவபெருமானைத் தவிர, அழகு மிகுதியும் பேரருளும், நம்பியோரைக்காக்கும் பெருங்கருணையும், தம்மைச் சரணடைந்தோரை "கோதாட்டி ஆட்கொள்ளும் வித்தகமும்" வேறு எத்தெய்வத்திடம் உள்ளன?

இவளை அவர் ஆட்கொண்டார் தம்வயப்படுத்திக் கொண்டார். அவரால் ஆட்கொள்ளப்பெற்றோர், முன்பும் பலபேர்

இருந்திருக்கிறார்கள் ஆயினும், அவருள் யாரும் இவளைப்போல் இப்படியும் பித்தேறி நிற்கவில்லை. தானே பேசிக்கொள்கிறாள்! தானே சிரிக்கிறாள். தனியே, தன் உலகில் வாழ்கிறாள். உடன் பழகும் நம்மோடு ஒரு சொல்லும் கூறவில்லையே! பெற்ற தாயோடும் ஓர் அன்புரை இல்லையே! இப்படி ஒரு பித்தா? என்று வியந்து பேசுகின்றாள்.

மாணிக்கவாசகர், "உள்ளேன் பிற தெய்வம் உன்னையல்லாதெங்கள் உத்தமனே" என்றும், "நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை பூணதுவாகக் கோணுதலின்றிச் சதுரிழந்து அறிமால் கொண்டு" என்றும், பிறவிடங்களில் கூறுவனவற்றை ஒப்புநோக்க, அவர் தமது பக்தியின் வளர்நிலையையே பெருந்திணைக் காதலியின் "மிக்க காமத்து மிடலாக" திருவெம்பாவையிற் படைத்து மொழிகின்றார் என அறியலாம்.

பாட்டு எண் 15

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர் ஒருகால் வாய்ஓவாள், சித்தங்களிகூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேர் அரையற்கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆர்ஒருவர்? இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப் பூண்முலையீர்! வாய் ஆரநாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல் பாய்ந்தாடேல் ஓர் எம்பாவாய்!

# பிறனில் விழையாமை

*முனைவர் கி.இளங்கோவன்*

மனித மனம் இச்சைகளின் ஊற்று. அதிலும் பொன்னும், மண்ணும், பெண்ணும் மனித மனத்துள் ஏற்படுத்தும் ஆசை அவலங்களுக்கு முடிவே இல்லை. இன்னொருவர் உடைமை என்று தெரிந்த பிறகும் மனித மனம் விகார ஆசைகளை விளைவித்துக்கொண்டு வேதனைக் கடலில் மூழ்கி மாய்வது உலகப் பேரிலக்கியங்களாக உயிர் பெற்றிருக்கின்றன. இராமாயணம், இலியத்தும் இந்த வகை இலக்கியங்களுக்குச் சரியான எடுத்துக்காட்டுகளாகும். அளவே இல்லாத ஆசைக்கடலுள் பிறர் மனைவியை விரும்புவதன் தீமையை மட்டும் தனியே எடுத்துக் காட்டித் திருத்த முயல்கிறது திருக்குறள்.

திருக்குறளில் ஒழுக்கமுடைமை எழுதிய சூடு ஆறுமுன் அதை அடுத்த அதிகாரமாகப் 'பிறனில் விழையாமை' என்ற அதிகாரம் பேசப்படுகிறது. ஒழுக்கத்தை உயிரினும் மேலாக எண்ணும் உயர்ந்தோரும்கூட பிறனில் விழையும் பேதைமை வயப்பட்டு அழிய நேரும் என்பதைக் கற்றவர்க்கு உணர்த்துவதற்காகவே இந்த அதிகாரங்கள் அடுத்தடுத்து அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆயிரம் மறைப் பொருள் உணர்ந்து அறிவு அமைந்தவன்தானே இராவணன். சாம வேதத்தின் சாற்றினைப் பருகிய அவனே அடுத்தவன் மனைவியை விரும்புதலாகிய தீயினைத் தீண்டவில்லையா? எனவேதான் கற்றாலும் கண்டார் விரும்பும் ஒழுக்கத்தில் நின்றாலும் பிறன் மனைவியை நயக்கும் பேதைமையைத் தவிர்ப்பது அரிது என்று சுட்டிக்காட்டவே ஒழுக்கத்திற்குப்பின் இந்த அதிகாரம் பாடப்பட்டது. இதை இந்த அதிகாரத்தின் முதல் பாட்டிலேயே இவ்வுலகத்தில் அறநூலையும், பொருள் நூலையும் ஆராய்ந்து அறிந்தவர்களிடத்தே பிறன் மனைவியைக் காதலித்து வாழும் பேதைமை இல்லை என்பதை,

"பிறன் பொருளான் பெட்டு ஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம் பொருள் கண்டார் கண்இல்"

என்று கற்றவர்க்கும் இந்த ஒழுக்கத்திற்கும் இருக்க வேண்டிய தொலைவைச் சுட்டிக்காட்டி விடுகிறார்.

குற்றமற்ற கற்புடைய மனையாளையே விரும்புவோனும் விழுமிய கற்பொழுக்கம் உடையவனாக இருத்தல் வேண்டும் என்றுதான் வள்ளுவர் 'பிறனில் விழையாமை' வகுத்துள்ளார். சிலர் வள்ளுவர் வகுத்துக்காட்டும் நெறியை நன்கு உணராத காரணத்தால், 'வள்ளுவர் பெண்டிரின் கற்பைத்தான் பேசியுள்ளாரேயன்றி ஆடவருக்கும் கற்பொழுக்கம் தேவையென்று விரும்பினர் இலர்' என்று பேசியும் எழுதியும் வருகின்றனர். இது அரிசியைக் களைந்து போட்ட உடனேயே பதம் பார்க்க அள்ளிய கதையாகவே இருக்கிறது.

'பிறர்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன்ஒன்றோ; ஆன்ற ஒழுக்கு' என்ற குறளைப் பாருங்களேன்.

இக்குறட்பாவினால் தெய்வப் புலவர் மூன்று செய்திகளைப் புலப்படுத்துகின்றார்.

முதல் செய்தியாவது: பேராண்மைநிலை. வள்ளுவனார் ஆடவர்பால் இருவகை ஆண்மையைக்கண்டு மொழிந்துள்ளார். புறப்பகையை அடக்குவது ஆண்மை, ஆனால் அந்த ஆண்மையை விட அகப்பகையாகிய காமப் பகையை அடக்கும் ஆண்மையே பேராண்மை என்கிறார். அதுவே விழுமியது எனவும் கண்டுள்ளார். காமப்பகையை அடக்குவது அருமையானதால் அதனைப் பேராண்மை எனக்கொண்டார்.

அகப்பகையாகிய காமத்தை அடக்குபவனே பிறனில் விழையாத பேராண்மை உடையானாவான். காமத்தின் காரணமாகப் பிறன் மனையாளை விரும்பி, அவள்பால் சென்று பாவச் செயலைச் செய்து சீர்கெட்டு அலையும் ஆடவர்கள் கணக்கிலர். அக்காமத்தை அடக்கிப்பிறனுக்கு உரிமை உடையாளை விரும்பாத பேராண்மை கொண்டோர் பெருமைக்குரிய சான்றோராவர்.

இரண்டாவது செய்தி: காமம் காரணமாகப் பிறன் மனையாளைக் கண்டு விரும்பிப் பாவச்செயலைச் செய்யாத சான்றோர்க்கு அந்நிலை ஆக்கம் மிகுந்த அறச்செயலாகும் என்பதாகும்.

மூன்றாவது செய்தி: பிறனுக்கு உரிமை உடையாளை நோக்காத பேராண்மை உடைய சான்றோர்க்கு அது அறமாக அமைவதோடு அல்லாமல், ஆன்ற ஒழுக்கமுமாகும் என்பதாகும். இதினின்று பிறனில் விழையாமை ஓர் ஆன்ற ஒழுக்கம் என்பது இனிது புலனாகிறது.

இப்பேராண்மை உடையோரே உலகில் எல்லா வகையான நன்மைகளையும் எய்துதற்குரியோர் என்றும் வள்ளுவர் விளம்பியுள்ளார்; இப்பேராண்மையைப் பெறாதோரை விட்டுப் பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கும் எப்பொழுதும் நீங்காது வாழும் என்றும் புலப்படுத்தியுள்ளார்.

இப்பேராண்மை உடையாரை

"நலக்குரியர் யார் எனின் நாம நீர் வைப்பிற்
பிறர்க்குரியாள் தோள் தோயா தார்" என்று பாராட்டுகிறார்.
இப்பேராண்மை இல்லாரையோ,
"பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்விறப்பான் கண்"
என்னும் பாடலால் அச்சுறுத்துகிறார்.

பிறன் மனையாளை விரும்பாது உறுகின்ற பேராண்மை யினைப் பெறாமல், பிறன்மனையாளை விரும்பிப் பழிக்கும் பாவத்துக்கும் ஆளானதோடன்றி அழிவையே தேடிக் கொண்டோரும் உளர்.

பிறன்மனையாளை விரும்புவதால் விளைகின்ற இன்னலையும் இழிவையும் அறிந்து, இங்கு மனித இனம் தெளிவு பெற இரண்டொருவர் வரலாறே போதும்.

கீசகன் வாழ்க்கையும், இராவணன் வாழ்க்கையும் என்றும் அழியாத இலக்கியங்களின் மூலம் நின்று, மனித இனத்தை நல்வழிப் படுத்துபவை யாகும்! பிறன் மனையாளை நினையாது வாழும் வாழ்க்கை, அருமை மிகு கற்புடைய வாழ்க்கையாகு மன்றோ!

அழகுணர்ச்சியோ அல்லது அதிசயமான பருவ உணர்ச்சியோ இதை எதுவென்றே சொல்வதற்கில்லை. தனது மனைவி தன்னருகில் நிற்கும்போது கூட அடுத்தவர் மனைவியை ஓரக் கண்ணால் உற்று நோக்கும் விநோத நடிப்பும் சிலரிடம் இருக்கலாம். பார்வையால் தொடங்கிப் பழக்கத்தில் நெருங்கி கொலை வாளில் இருவர் குடும்பமும் முடியும் காட்சியும் நமக்குத் தெரிந்தது. அறம் கருதி வாழும் சமுதாய அமைப்பைப் பெரிதாக எண்ணுவோர், தம் குடும்பமும், அடுத்தவர் குடும்பமும் அமைதியாக அறப்பணியில் ஈடுபட வேண்டுமென விரும்புவர் ஆதலால் அவர்க்கு எல்லாம் பிறனில் விழையாமை பெரியதோர் அறமே ஆகும்

தன் மனைவியின் கற்பைப் பெரிதாக மதிக்கும் ஆடவன் பிறன் மனைவியின் கற்பையும் பெரிதாக எண்ணிப் பெருமையளிக்க வேண்டுமன்றோ? இல்லற நெறியைக் காக்க விரும்பினால், புரையோடிப்போன உணர்வுகள் நெஞ்சைத் தாக்க இடமளிக்காமல், தன்னைக் காத்து நிற்பதே முதற் கடமை, வீரம், தீரம், இசை ஞானம், இறையன்பு முதலிய நற்குணங்களை உடைய இராவணனின் சிறப்பெல்லாம் பிறன் மனைவியை நேசித்தபோது இல்லாமல் போயிற்றே. காட்டில் வாழலாம் எனக்கருதி வந்த இராமனின் குடும்ப வாழ்வும் கருகிப் போயிற்றே தருமத்தையே நெருப்பில் நிறுத்திப் பரிசோதிக்க நேர்ந்ததே. அசோக மரத்தடியில் கற்பு அழுததே. வீட்டை நோக்கி விருந்து வரும்போது கணவன் என்னுறுமோ என்று விம்மி அரற்றியதே. ஒருவன் செய்த தவறு, எத்தனையோ குடும்பங்களைப் பாழ்படுத்திவிட்டதே,. இது போன்ற காவிய நிகழ்ச்சிகள் உண்மை வாழ்விலும் வந்துவிடக்கூடாது என விரும்பியே, பிறனில் விழையாமையைப் பெருந்தவமாக பேராண்மையாக மதித்து எழுதுகிறார் வள்ளுவர்.

இன்பம் ஒன்றையே கருத்தில் கொண்டு, அயலார் மனைவியை நேசித்து, அறம், பொருள் இரண்டையும் அழித்தோர் பலர், பிறனுக்குரிய செல்வம் பெண்ணொருத்தி அவளைத் தனக்குரியவள் ஆக்கும் ஆசையால் விரும்பி ஒழுகும் அறிவை நல்லறிவு எனலாமா? அது உண்மையில்

பேதமை அன்றோ? அறம் பொருள் இன்பம் மூன்றும் இணைந்து வாழ்வதே இல்லறமென்று எண்ணாமல், இன்ப வெறிக்கு அறத்தையும் பொருளையும் பலியிடுதல் பேதையின் செயலல்லவா? அறம் எது? பொருள் எது? என்று தெளிந்துணர்ந்த அறிவாளியிடம் அது போன்ற செயல் பிறப்பதுமில்லை, இருப்பதுமில்லை.

"பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார் கண்இல்"

அறிவுடையார் அனைவரும் அறத்தின் தலைவாசலில் நிற்பவர்கள். அறிவற்றோர் பிறன் கடை நிற்கும் பேதையர் ஆகி, அடுத்தவர் வாசலில் காத்துக்கிடப்பர். பாவச்செயல் பல புரிந்து அறன் கடை நின்று வாழும் கொடுமையாளர்களைவிடப் பிறன்கடை நிற்போர் கொடியோர் ஆவர்; மூடரும் ஆவர். மாற்றான் மனைவியை வஞ்சிப்பதும் நேசிப்பதும் ஒன்றேயாகும். ஆசையால் விரும்புவதும் அறியாமையால் விழைவதும் பேதையின் செயலே. சிலர் அறிவிருந்தும் கெடுகின்றார்களே, அவர்களை என்னவென்பது?

செத்தார்க்கும் அவர்க்கும் வேறுபாடு உண்டோ? நம்பிக்கையோடு ஏற்று உபசரிக்கும் வீட்டில் தீமை புரிந்து ஒழுகிவரின், அறிவுணர்ச்சி அற்றவன், செத்த பிணம் என்றுதானே கூறுவர். மானம், மரியாதை, நம்பிக்கை அனைத்தையும் சாகடித்து, அறத்தையும் பொருளையும் இழந்து நிற்கும் நிலையைக் கண்ணால் கண்டு ரசிக்க முடியுமா? "எல்லாம் இழந்து ஈயாடாத முகத்துடன் அவர்கள் நிற்பதை நோக்கும்போது அவர்கள் விளிந்தாரின் வேறல்லர்" என்பது எளிதில் நமக்குப் புரிந்துவிடும்.

அறம்பொருள் அறிவு முதலியவற்றை இன்பத்திற்காகப் பறி கொடுத்தவர்கள் முடிவில் பெருமதிப்பையும் இழந்து தவிப்பது உறுதி. அளவிட்டுக்கூற முடியாத பெரும்புகழ் பெற்றிருந்தாலும் அதனால் இலாபமில்லை. தினையளவும் சிந்தித்து நோக்காமல் பிறனில் புகுந்தான் எனும் பேச்சு, தெருவெங்கும் வெடித்தெழும்போது மதிப்பெல்லாம் அவமதிப்பாகுமே. சிலர்

பேசும் விருத்தாந்தங்கள் சிலபோது விநோதமாக இருக்கும். "கிடைத்த பொருளை நாமேன் புறக்கணிக்க வேண்டும், வலிய வந்து வாய்த்தது அனுபவித்தேன்" என்ற சுய ஏமாற்றுத் தத்துவம் பலரைப் பழிவாங்கி இருக்கிறது.

எளிதென இல்லிறப்போர் எத்தனை பேர்! அவர்களைப் பழி வந்து சூழ்வது உறுதி. பேதைப் பெண் என்று கண்டு அதை முதலீடாக் கொண்டு அறிவிழந்து அறமிழந்து பிறன் மனைக்குள் நுழைவது தவறன்றோ? சாகும்வரை உலகம் தூற்றுமே. பகை வளர்த்து, பாவச் செயல் கருவாகி வளர அழியாத பழி நின்று கூத்தாடுமே. இவையெல்லாம் அமைதி விரும்பும் ஒருவனுக்குத் தேவையா? அறம் புரியும் ஒருவனுக்கு வேண்டுமா? அறவாழ்வை மேற்கொண்ட பெருமையும், இல்வாழ்வான் என்றப் பெருஞ்சிறப்பும் இருக்க வேண்டுமானால், பிறன் மனைவியின் பெண்மையை விரும்பக்கூடாது. அதை நெஞ்சாலும் நினைக்காத பெருந்திண்மை வேண்டும். கண்ணாலும் பிறன் மனையை நோக்காத வைராக்கியம் வேண்டும். உலகை அடக்கியாள்வது ஆண்மையென்று மதிக்கப்படலாம். ஆனால், உணர்வை அடக்கியாள்வது பேராண்மையாகும். அதுவே சான்றோர்க்கு அறமாகவும் உயரிய ஒழுக்கமாகவும் விளங்குகிறது.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ ஆன்ற ஒழுக்கு"

நாம் மாற்றான் மனைவாழ்வைக் காப்பதும் ஒரு பேரறம். மனத்தை அடக்கி வாழ்வதோ ஆன்ற ஒழுக்கம் என்ற அருமையைப் பெறும். எனவே தான் பிறன்மனை நோக்காத பேராண்மையை அறமென்றும், ஆன்ற ஒழுக்கமென்றும் மதிக்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

# தாய்மொழிப்பாடத்தில் தரமான கலைத்திட்டம் தேவை

முனைவர் க.குழந்தைவேல் பன்னீர்செல்வம்

முன்னுரை:

வானார்ந்த பொதியின்மிசை சார்கின்ற மதியாகவும், மன்னிய மூவேந்தர்கள் மடிவளர்ந்த மகளாகவும், ஆனாத நூற்கடல் அளித்தருளும் அமிழ்தாகவும் சிறந்தோங்கிய செந்தமிழ் இன்று, அயல்மொழிக்கலப்பால் பொலிவிழந்து நலிவடைந்துள்ளது. கட்டாயமாக ஒரு மொழியைப் படிக்கவேண்டுமே என்று பெரும்பாலானோர் தமிழைக் கற்கின்றனர். பலர் வயிற்றுப் பிழைப்பிற்காகக் கற்கின்றனர். சிலரே விரும்பிக் கற்கின்றனர். சிந்தனையை வளர்த்து அறிவைச் செப்பனிடுவது தாய்மொழி, அதுவே எண்ணத்தை ஏற்புடைய நெறியில் வெளியிடும் கருவி. மனவெழுச்சிகளைத் தாய்மொழியைப்போல் பிறமொழிகளின் மூலம் வெளிக்காட்டுதல் அரிது எனவே கலைத்திட்டத்தில் (Curriculam) இந்தத் தாய்மொழியறிவை வளர்க்கும் கூறுகள் பெரிதும் இணைக்கப்பெறல் வேண்டும்.

கலைத்திட்டம் - அடிப்படை:

நாட்டின் எதிர்காலம் பள்ளியில்தான் நிச்சயிக்கப்படுகிறது. பள்ளிகள் கலைத்திட்டத்தின் அடிப்படையில் இயங்குகின்றன. கலைத்திட்டம் வழங்கும் கல்விதான் நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் மாற்றத்திற்கும், வாழ்க்கை அமைப்பு முறைக்கும், பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் அடிப்படை. தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் பயன்படுவது அறிவு. இந்த அறிவைத் தருவது கலைத்திட்டம். மாணவர்களின் ஆர்வத்தினை வளர்த்து, அவர்கள் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு வாழத் தம்மைத் தகுதிப்படுத்திக் கொள்ளும் நிலையைப் பெறக் கலைத்திட்டம் வகை செய்யவேண்டியது அவசியம்.

*கலைத்திட்டத்தில் அறிவு:*

அறிவு என்பது ஆகாய விமானம் போன்றது எனில் கலைத்திட்டமென்பது அதன் ஓடுபாதை. இக்கலைத்திட்டப் பாதை நெறிப்பட்ட கல்வி அறிவையளித்து மாணவர்களை உயர்த்தும். நல்ல கலைத்திட்டம் ஒன்று தாய்மொழியறிவை மாணவர்கள் தெளிவாகப் பெற்றிடும் வகையில் அமைவதற்கு அறிவியல், வரலாறு, புவியியல், கணிதவியல் போன்ற துறையினறிவைப் பெற்றிடும் வகையிலமைய வேண்டும்.

எல்லாத்துறைக்கல்வியையும் தாய்மொழியளிக்கும், அந்தத்திறன் அம்மொழிக்குண்டு என்று கூறுமளவிற்கு அடிப்படை தாய்மொழியறிவை வளர்க்க கலைத்திட்டம் அமைதல் நலம். உரைநடைப்பாடங்கள் மொழியறிவை வளர்ப்பதாக மட்டுமில்லாமல் உரைநடையில் மொழியோடு நேரடி தொடர்பற்ற வேறு பல இயல்களைச் சார்ந்த பாடங்களையும் பாட ஏற்பாட்டில் (Syllabus) இடம்பெற கலைத்திட்டத்தைச் செய்ய வேண்டும். இவை வகுப்பு நிலைகளுக்கு ஏற்ப அமைதல் அவசியம்.

*தாய்மொழியில் கல்வித்திட்டம்:*

மக்களின் வழக்கம், சமுதாயத்தேவை, பண்பாடு, பொருளாதாரமேம்பாடு, அறிவியல் வளர்ச்சி ஆகியவற்றிற்கேற்ப அமைக்கப்படும் கலைத்திட்டம் தாய்மொழியைச் சார்ந்து அமைக்கப்படுதலே சிறப்புடையதாகும். மொழிப்பாடக் கலைத்திட்ட அமைப்பிலுள்ள படிநிலைகள்,

- நல்ல நடை, தமிழை வளர்க்கும் நோக்கிலும் மாணவர்களின் பண்புநலன், பண்பாடு, அறக்கருத்துக்களைப் போதிப்பதாகவும் அமைதல்.
- தேவைக்கேற்ப புதுமைநடையையும் புதிய கலைச் சொற்களையும் ஆக்கும் கல்வியை அளித்தல்.
- உயர் வகுப்புகளுக்கு மொழிவளர்ப்பு, இலக்கியச்சுவை, நுகர்திறன் போன்ற கலைகளை வளர்க்கும் விதத்தில் அமையும்.

- அனுபவங்களை முழுமையாக ஏற்படுத்தும் கல்வியும், பாட இணைச்சொற்களையும் பெற்று பிற்கால வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்யும் வகையில் பல்துறைப் பாடங்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்த தாய்மொழிக்கல்வி கடமையாகக் கொள்ள வேண்டும்.

- சமூக மரபுரிமையை அடுத்த தலைமுறையினருக்கு வழங்கிட நமது நாகரீகம், பண்பாடு இவற்றை பாதுகாத்து சிற்பம், சித்திரம், வீரம், காதல், இறைமை. நேர்மை முதலிய நெறிப்பட்ட பண்புகளை கற்பிக்கும் பாடங்களைக் கலைத்திட்டம் மொழிப்பாடத்தில் கொண்டிருத்தல்.

- சூழ்நிலைகளுக்கேற்ப "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்ற அடிப்படையில் சமுதாயத் தேவைகளை நிறைவு செய்ய தொடக்கக்கல்வி நிலையிலிருந்து பல்கலைநிலை வரை தொடர்ச்சியான தன்மையினையும் கொண்டு அமைதல்.

- இலக்கண விதிகளை நன்குணரும் வகையில் விதிவரு, விதிவிளக்க முறையில் அமைதல்.

- கல்வி உளவியலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், அரசின் கொள்கை, பெற்றோரின் விருப்பம் ஆகியவற்றிற்கேற்பவும் கலைத்திட்டம் மாற்றியமைத்து அதனுடைய நிலையிலிருந்தும், தரத்திலிருந்தும் குறைந்துவிடாமல் காப்பாற்றப்பட வேண்டும்.

முடிவுரை:

சிறந்த கலைத்திட்டத்தால் மாணவர் பெறும் மொழியறிவு அவர்களை நிகழ்கால வாழ்விற்கு மட்டும் துணை நிற்காமல் வருங்கால வளமைக்கும் வழிவகுக்க வழிசெய்ய வேண்டும்.

# பரணர் பாத்திறன் (புறநானூறு)

*முனைவர் பெ.சுயம்பு*

சங்க இலக்கிய வரலாற்றில் கபிலருக்கு இணையான சிறப்பு பரணருக்குத் தரப்படுகிறது. 'கபிலபரணர்' என்னும் தொடர் இதனை மெய்ப்பிக்குமாறு தோன்றியதாகும். இவர் அகம், புறம் என்னும் இருவகைப்பொருள் குறித்தும் கவின்மிகு கவிதைகளைப் புனைந்துள்ளார். இவரது பாடல்கள்:

புறநானூற்றில் - 13 பதிற்றுப்பத்தில் - 5
நற்றிணையில் - 12 குறுந்தொகையில் - 17
அகநானூற்றில் - 34

புறப்பொருட்களுள் அறுபத்தெட்டுத் துறைக்கருத்துக்களை மையமாகக்கொண்டு புறநானூற்றுப் பாடல்கள் அமைக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் இயன்மொழி, அரசவாகை, கையறுநிலை, மகட்பாற்காஞ்சி, பரிசில் கடாநிலை, பரிசில்துறை, பொருள்மொழிக்காஞ்சி ஆகியன புலவர் பலராலும் பாடப்பெற்றுப் பேரளவில் பாடல்களைக்கொண்டுள்ளன. கபிலர் மகட்பாற்காஞ்சி, குறுங்கலி, இயன்மொழி வாழ்த்து, கொற்றவள்ளை, பாணாற்றுப்படை, ஏர்க்கள உருவகம், தொகைநிலை என்னும் ஏழு துறைகளைக் கருவாகக் கொண்டு புறநாநூற்றுப் பாடல்களை இயற்றியுள்ளார். இவ்வேழனுள்ளும் மகட்பாற் காஞ்சி குறித்த பாடல்களே மிகுதி. இத்துறை குறித்து ஆறுபாடல்கள் புறநானூற்றில் உள்ளன. எனவே மகட்பாற்காஞ்சித் துறை கபிலரை மிகவும் ஈர்த்துள்ளது எனலாம்.

மகட்பாற் காஞ்சி - புறப்பொருள்

'நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பா டஞ்சிய மகட்பால்'

எனத் தொல்காப்பியம் (பொருள்.77) இத்துறையை விளக்குகிறது. இதனைப் புறப்பொருள் வெண்பாமாலை,

'ஏந்திழையாள் தருகென்னும்
வேந்தனொடு வேறுநின்றன்று'
என விவரிக்கிறது.

மகட்பாற்காஞ்சிப் பாடல்கள் பெண்ணொருத்தியை மணம் செய்தல் தொடர்பாக உருவாகிற பகைமையின் கொடுமையினை விவரிக்கின்றன. இப்பாடல்களில் பாட்டுடைத்தலைவன், தலைவி ஆகியோரின் இயற்பெயர் சுட்டப்பெறுதல் இல்லை. பொதுமையாக, பழந்தமிழர் பண்பாட்டு - வாழ்க்கை - உணர்வின் அடிப்படையினை விவரிப்பனவாக இப்பாடல்கள் காணப்படுகின்றன.

இல்வாழ்க்கைக்குத் துணையான இல்லாளை விரும்பும் ஒருவனுக்கு அவள் வாய்க்கப் பெறாத போழ்து, பெண் வீட்டாருக்கும் - இனத்தாருக்கும் ஆண் வீட்டாருக்கும்- இனத்தாருக்கும் இடையே பகைமை ஏற்படுதல் இயல்பானது. இப்பகைமை பெரும் போராக அமையக்கூடுமோ? என்ற அச்சத்தை வெளிப்படுத்திக் கொள்ளும் வகையில் புலவர்கள் மகட்பாற்காஞ்சியைப் பாடியுள்ளனர்.

மகட்பாற் காஞ்சியில் இடம்பெற்றுள்ள தலைவன் பேராற்றலும் பெருஞ்செல்வமும் வாய்க்கப்பெற்ற மன்னவனாக விவரிக்கப் பட்டுள்ளான்.

'வேட்ட வேந்தனும் வெஞ்சினத் தினனே' (336)
'வேந்து குறையுறவும் கொடாஅன்' (341)

'நிழல்தொறும் நெடுந்தேர் நிற்ப வயின்தொறும்
செந்நுதல் யானை பிணிப்ப
வருந்த லமன்எம் பெருந்துறை மரனே' (348)

என்னும் பாடலடிகள் பெருஞ்செல்வமும் படைகளின் ஆற்றலும் உடைய மன்னன் வேறொருவனது மகளை மணக்கப்பெரு வேட்கை கொண்டதைத் தெரிவிக்கின்றன மேலும், இப்பகைமையில் பெண்ணுக்கு எதிராகப் பல மன்னர்கள் திரண்டுவந்து பொருத செய்தியினையும் காணமுடிகிறது.

'பைங்காற் கொக்கின் பகுவாய்ப் பிள்ளை
மென்சேற் றடைகரை மேய்ந்து உண்டதற்பின்
ஆரல் ஈன்ற ஐயவி முட்டை
கூர்நல் இறவின் பிள்ளையொடு பெறூஉம்
தண்பணைக் கிழவனிவள் தந்தையும் வேந்தரும்
பெறாஅ மையின் பேரமர் செய்தலின்'

என்னும் அரிசில் கிழார் பாடல் (342) பலவேந்தர்கள் திரண்டு எதிர்த்துப் பொருத செயலையும் பெண்ணின் தந்தை செல்வவளம் மிகுந்தவன் என்பதையும் உணர்த்துகிறது.

பெண்ணை விடவும் சமுதாயத் தரம், செல்வம், ஆற்றல் போன்ற தகுதிகளில் அவளை விரும்புகிறவன் மிகுந்தவனாகப் புறப்பாடல்களில் காணப்படுகிறான். இந்த ஆண்மையின் உயர்வு தொல்காப்பியத்தினால் ஏற்கப்பெற்றதாகும். இல்வாழ்க்கையை நிகழ்த்தப்போகும் தலைமக்கள் பிறப்பு, ஆண்மை, குடிமை, செல்வம் போன்றவற்றில் ஒப்புமை உடையவராக இருத்தல் வேண்டும் என்று கூறுகிற இந்நூல்,

'மிக்கோன் ஆயினும் கடிவரை வின்றே' என ஆண்மைக்கு உயர்வினை உடன்படுகிறது.

பெண்ணை மணந்துகொள்ளுதற்காகப் பெரும்பொருளை அவளது குடும்பத்தாருக்கு கொடுக்கும் வழக்கம் அந்நாளில் இருந்தது. பெண்ணை மறுத்து வீராப்புப் பேசுகிறவர்கூடப் பெருஞ்செல்வத்தை ஆடவன் தரும்போது, தன் நிலையை மாற்றிக்கொண்டு, மகள் கொடுத்து அமைவது உண்டு. ஆனால், தன் குடிப்பெருமைக்கு இணையாகாதவருக்கு மகளைக் கொடுத்தற்கு மறக்குடிமக்கள் உடன்படுதல் இலர்.

'புனலங் கள்ளின் பொலந்தார்க் குட்டுவன்
முழங்கு கடல்முழவின் முசிறி அன்ன
நலம்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரையர் அல்லோர் வரையலள் இவள் எனத்
தந்தையும் கொடாஅன்' (343)

'மையல் நோக்கின் தையலை நயந்தோர்
அளியர் தாமேஇவள் தன்னை மாரே

செல்வம் வேண்டார் செருப் புகல் வேண்டி
நிரல்அல் லோர்க்குத் தரலோ இல்என
கழிப்பிணிப் பலகையர் இதுவாய் வாளர்' (345)

'புரையர் அல்லோர்', 'நிரல் அல்லோர்' என்னும் தொடர்கள் குடிமையில் ஒப்புமை இல்லாமை காரணமாக மக்கள் தம் மகளை மறுத்தலைக் காட்டுகின்றன. காவிரிப்பட்டினத்துக் காரிக்கண்ணனார் (353) தொல்குடி மன்னன் மகள் என்று குடிமையைச் சுட்டிக்காட்டுகிறார்.

செல்வம், பதவி, அதிகாரம் போன்ற சமுதாயத் தரங்கள் நிலையானவை அல்ல; நெடுங்காலத்திற்கு முன்னிருந்து தொடர்ந்து வருகிற பரம்பரைத் தகுதியாகிய குடிமையே நிலையானது என மக்கள் கருதுகின்றனர். இந்த எண்ணமே மணப்பெண் காரணமாகப் பெரும்போர்கள் நிகழுதற்குக் காரணமாகிறது. தம் குடியே உயர்ந்தது என எண்ணுகிற முனைப்பினை எக்காலத்தும் மக்களிடம் காணமுடியும்,

மகட்பாற்காஞ்சித் துறைக்கான உரிப்பொருள் (Theme) இல்வாழ்க்கைச் சார்ந்ததே. எனவே அகப்பொருளாக இது கருதத்தக்கது; உரிப்பொருளை விவரிக்கும் முறையும் அகப்பொருள் மரபினைச் சார்ந்து 'சுட்டி ஒருவர்ப் பெயர்கொளப்' பெறாது உள்ளது. ஆயினும் ஆணும் பெண்ணும் தம் மனத்தளவில் இசைந்து அன்பு கொள்ளுதல் இங்கு இடம்பெறவில்லை. பெண்ணின் விருப்பம் புறக்கணிக்கப் படுகிறது. ஆணின் வேட்கையே அதிகாரம் செலுத்துகிறது. இதனால் அங்குக் காதலுக்கு மாறான கழிகாமமே மேலோங்கி நிற்கிறது. எனவே அறத்திற்கு மாறான இத்துறை அன்பின் ஐந்திணையாகிய அகப்பொருளிலிருந்து விலக்கப்பெற்றுப் புறத்திணையுள் சேர்க்கப்பெற்றுள்ளது.

### குறுங்கலி

புறநானூற்றில் பரணரால் பாடப்பெற்றவையுள் இருபாடல்கள் (144,145) இருண்மை (ambiguity) உடையனவாகத் துறை வரையறுத்தோரால் கருதப்படுகின்றன. அவற்றைத் 'திணை-பெருந்திணை, துறை-குறுங்கலி; தாபத நிலையுமாம்' என்று

குறிப்பிட்டுள்ளனர். ஒரு பாடல் ஒன்றுக்கு மேற்பட்ட உரிப்பொருட்களோடு தொடர்புடையதாகக் காணப்பட்டால், அது இருண்மை உடையதாகக் கருதப்படும். பரணரின் பாடல்களில் இருண்மை உள்ளதா?

குறுங்கலியைப் புறப்பொருள் வெண்பாமாலை,
'நாறிருங் கூந்தல் மகளிரை நயப்ப
வேறுபடு வேட்கை வீயக் கூறின்று'

என விளக்குகிறது. தனது மனைவியைப் பிரிந்து, வேறு பெண்டிருடன் காமுற்று வாழ்கிற ஒருவனது காம வேட்கை அழியுமாறு கூறுதல் குறுங்கலி ஆகும். கணவன், மனைவியரைச் சேர்த்து வைப்பது இதன் நோக்கம்.

வையாவிக்கோப்பெரும் பேகனைப் பரணர் பாடிய இரு பாடல்களும் அவனை மனைவியிடம் சேர்ந்து வாழுமாறு குறிப்பாக உணர்த்துகின்றன.

இருள் படரும் மாலை வேளை, செவ்வழிப் பண்ணிசைத்து நினது வளமான காட்டினைப் பாடிக்கொண்டிருந்தேன். அதனைக் கேட்ட ஒருத்தியின் கண்களிலிருந்து நீர் கொட்டியது, 'இளம்பெண்ணே! என் நண்பனுக்கு நீ உறவினளோ?' என்றேன். காந்தள் மலர் போன்ற விரல்களால் கண்ணீரைத் துடைத்தாள். ''நான் அவனுக்கு உறவினள் அல்ல; என்னைப்போன்ற ஒருத்தியின் எழில்மீது வேட்கையுற்று அவன் வருவான்' என்று கூறினாள். அவளுக்கு நீ அருள் புரியவில்லை எனில், அது மிகக் கொடிதாகும். இவ்வாறு ஒரு பாடல் (144) அமைந்துள்ளது.

குளிரால் மயில் துன்புறும் என்று எண்ணி அதற்குப் போர்வைத் துணியை வழங்கிய பேகனே! பசி காரணமாக நான் உன்னை நாடி வரவில்லை; வேறு மனத்துன்பமாகிய சுமைகளும் எனக்கு இல்லை. நின்னைப்பாடி இரந்து வந்திருக்கிறேன். மனத்துன்பத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கிறவளிடம் உடனே சென்று, அவளது துன்பத்தைப் போக்குவாயாக. இதுவே நான் நின்னிடம் வேண்டும் பரிசாகும். அருள் வேட்கை உடையவனே, இதுவே சிறந்த அறம். இந்த அறத்தைச் செய்திடுக.

மடத்தகை மாமயில் பனிக்கும் என்றருளி
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசை
கடாஅ யானைக் கலிமான் பேக
பசித்தும் வாரேம் பாரமும் இலமே
களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்
நயம்புரிந்து உறையுநர் நடுங்கப் பண்ணி
அறம்செய் தீமோ அருள்வெய் யோயென
இஃதுயாம் இரந்த பரிசில் அஃதிருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னாது உறைவி அரும்படர் களைமே

இது மற்றொரு பாடல்.

பரணரின் இவ்விரு பாடல்களும் புறப்பொருள் வெண்பா மாலையின் குறுங்கலி இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாக அமைந்துள்ளன.

மனைவியைத் தனிமையில் தவிக்கச்செய்து, கணவன் வேறு மகளிரிடம் காமவேட்கை கொண்டு வாழ்தல் அறத்திற்கும் அன்பிற்கும் அப்பாற்பட்டது. எனவே இல்லற வாழ்வில் நேரிடக்கூடிய இத்தகைய ஒழுக்கங்களைப் பழந்தமிழர் அகமாகக் கொள்ளாது, புறத்திணையுள் சேர்த்துள்ளனர்

தாபதநிலை என்பது கணவனை இழந்த பெண்ணின் கைம்மை ஒழுக்கத்தை எடுத்துரைப்பதாகும். இதனைத் தொல்காப்பியம் (பொருள். 77),

'காதலன் இழந்த தாபதநிலை'
என்றும் புறப்பொருள் வெண்பாமாலை

'குருந்தலர் கண்ணிக் கொழுநன் மாய்ந்தெனக்
கருந்தடங் கண்ணி கைம்மை கூறின்று'
என்றும் விளக்குகின்றன.

பரணரது மேற்கண்ட பாடல்களில் தாபத நிலைக்கான குறிப்பேதும் இடம்பெறவில்லை. தாபதநிலை குறித்த சில பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. அவை பெண்டிரின் கைம்மை வாழ்க்கையினை விவரிக்கின்றன.

கைம்பெண்டிர் சத்துக்குறைவான உணவினைக் குறைவாக உண்கின்றனர்.

'பெருவளக் கொழுநன் மாய்ந்தெனப் பொழுதுமறுத்து
இன்னா வைகல் உண்ணும்
அல்லிப் படூஉம் புல்லாயினவே'

இவ்வாறு ஒக்கூர் மாசாத்தனார் (248) கைம்மை வாழ்க்கையை விவரிக்கிறார்.

'கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவி'

தம் மேனி எழிலைக் குலைத்துக்கொண்டு, அல்லியில் விளைகிற புல்லை உண்டு நோன்பு வாழ்க்கையினைக் கணவனை இழந்தவள் மேற்கொள்ளுதலை தாயங்கண்ணியார் (250) எடுத்துரைக்கிறார்.

கணவனை இழந்த பெண் இவ்வுலகில் வாழுதலைச் சுமையாகக் கருதுகிறாள். எனினும் புதல்வர்களைப் பேணுதல் முதலான பொறுப்புக் காரணமாக உயிரைத் துறக்காது, வாழ வேண்டிய இழிநிலை அவளுக்கு ஏற்படுகிறது. கோவலன் இறந்த பின்னரும் மணிமேகலையின் பொருட்டு மாதவி கைம்மை வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

## பாணாற்றுப்படை

புறநானூற்றின் இன்னொரு பாடலையும் (141) இருண்மை நிலையில் துறை குறித்துள்ளனர். பரணர் பாடிய இப்பாடல் பாணாற்றுப்படையைச் சார்ந்தது எனக்குறிப்பிட்டு, 'புலவராற்றுப் படையுமாம்' என்னும் குறிப்பினையும் தந்துள்ளனர். இப்பாடலில் பேகனிடம் பரிசு பெற்று வந்து, சுரத்திடையே பாணரும் விறலியரும் இளைப்பாறிய நிகழ்ச்சி சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'பாணன் சூடிய பசும்பொற் றாமரை
மாணிழை விறலி மாலையொடு விளங்க
கடும்பரி நெடுந்தேர் பூட்டுவிட் டசைஇ
ஊரீர் போலச் சுரத்திடை இருந்தனிர்
யாரீ ரோவென வினவல் ஆனா'

குறிப்பிட்ட ஓர் இனத்தவருள் பரிசு பெற்றோரிடம் பெற விரும்புவோர் வினவுதலே ஆற்றுப்படையின் இலக்கணமாகும். இப்பாடல் பரிசு பெற்ற பாணர் இனத்தவரிடம் வினவுவதாகக் காணப்படுகிறது. எனவே இதனைப் பாணாற்றுப்படைப் பாடலாகக் கொள்ளுதலே ஏற்புடையது.

**ஏர்க்கள உருவகம்**

பாடலின் உரிப்பொருளை உயிரோட்டமாகவும் தெளிவாகவும் புலப்படுத்துகிற ஒரு நெறியாகவே உவமை, உருவகம் போல்வன விளங்குகின்றன. மேலும், உவமையினும் ஆற்றல் மிக்க நெறியாக உருவகம் காணப்படுகிறது. உவமையும் பொருளும் வெவ்வேறு என்ற வேற்றுமை உணர்வினை நீக்கி, இரண்டும் ஒன்றே என்னும் உணர்வினை உருவகம் தருகிறது. இந்த ஆற்றலே உவமையினும் உருவகத்தை உயிரோட்டம் மிக்கதாகக் காட்டுகிறது. கருத்துப் பொருளை உணர்வு ததும்புகிற காட்சிப் பொருளாக உருவகம் உருக்கொடுக்கிறது. இதனாலேயே உருவகம் சிறந்த உருக்காட்சிக்கான (Image) விவரிப்பு முறையாகக் கருதப்படுகிறது.

புற இலக்கிய வல்லுநர்கள் இலக்கிய உருவாக்கத்தில் செய்துள்ள புதுமைகளுள் ஒன்றே ஏர்க்கள உருவகம் ஆகும். இத்துறையில் உரிப்பொருளைப் புலப்படுத்துகிற விவரிப்பு நெறியாகிய உருவகமே துறைக்குப் பெயராகவும் கூறப்படுகிறது. இத்துறையினைப் புறப்பொருள் வெண்பா மாலை மறக்கள வழி எனக் குறிப்பிடுகிறது.

'முறவுறழ் திணிதோளானை
உழவனாக உரைமலிந்தன்று'

என்பது மறக்களவழிக்கு இந்நூல் தருகிற விளக்கம்.

பரணர் சேரமான் கடல் ஓட்டிய வெல்கெழுகுட்டுவனைக் குறித்துப் பாடிய பாடல் (369) இத்துறையைச் சார்ந்தது. இதில் சேரமானின் போர்த்திறம் உழவுத்தொழிலாகச் சிறப்பாக உருவகிக்கப் பெற்றுள்ளது.

உரிப்பொருளினைப் பாடலின் அகவடிவாகிய ஒரு நிகழ்ச்சியாக உருவாக்குதற்குப் புலவர்கள் சில விவரிப்புத் திறன்களைக் கையாளுகின்றனர். இத்திறன்கள் உத்தி எனப்படுகின்றன. மகட்பாற் காஞ்சிப் பாடல்கள் கண்டோரின் அல்லது பொதுவான மனிதரின் கூற்றாக அமைக்கப் பெற்றுள்ளன ஒரு பெண் காரணமாகப் போர் உருவாகி, அவள் பிறந்து ஊரும் இனமும், அவளை விரும்பி வந்தோரின் இனமும் பேரழிவை எய்தப் போகின்றனவே என்று கண்டோர் இரங்கிக் கூறும் முறையில் இப்பாடல்கள் காணப்படுகின்றன். இவற்றில் பெண்ணின் வனப்பின் விவரிப்பு, பெண் விரும்பி வந்தவனைப் பற்றிய விளக்கம் ஆகியன இடம்பெற்று, உரிப்பொருளாகிய துளி பாடல் நிகழ்ச்சியாகிய பெருவெள்ளமாக உருவாக்கப் பெறுகிறது.

பரணர் சொல்லாட்சி, உவமைத் தெளிவு ஆகியவற்றின் வாயிலாகத் தம் பாடல்களை உணர்ச்சி மிகுந்த ஓவியங்களாக்கித் தந்துள்ளார்.

## பேச்சு மொழி நடை

கருத்துக்களை வெளிப்படுத்துதற்குப் பரணர் எடுத்தாளும் சொல்லாட்சி இயற்கைத்தனம் நிறைந்த பேச்சுமொழி நடையில் காணப்படுகிறது. மக்கள் உணர்ச்சி மழுங்காமல் சாதாரணமாகச் சொற்களை வரைவின்றி அள்ளி வீசுதலைப் பேச்சு மொழியில் காணலாம். ஓர் இளம்பெண் மீது ஒருவன் வேட்கை கொண்டமையால் போர் உருவாகும் சூழல் அமைகிறது. இதனை அறிந்த ஒருவர், 'இவளது தாய் இவளைப் பெற்று வளர்க்கும் போதே பகைமையினையும் இவளுடன் சேர்த்து வளர்த்திருக்கிறாள். எனவே அவள் பண்பில்லாதவள்' என்று கூறுகிறார்.

'...................... விறல்மலை
வேங்கை வெற்பின் விரிந்த கோங்கின்
முகைவனப் பேந்திய முற்றா இளமுலைத்
தகைவளர்த் தெடுத்த நகையொடு
பகைவளர்த் திருந்த இப்பண்பில் தாயே' (336)

'இவளது தாய் இவளை ஈனவில்லை என்றால் இப்போர் உருவாகியிராது; பகைவரது யானைகள் பிணிக்கப்பட்டமையால், மரங்கள் யாவும் நசுங்கி வருந்தியிரா' இவ்வாறு ஒருவர் கூறுகிறார்.

'குவளை உண்கண் இவளைத் தாயே
ஈனா ளாயினள் ஆயின் ஆனாது
நிழல்தொறும் நெடுந்தேர் நிற்ப வயின்தொறும்
செந்நுதல் யானை பிணிப்ப
வருந்தல் மன்எம் பெருந்துறை மரனே' (348)

## தொடர் உருவகம்

பரணரின் விவரிப்புத் திறனுக்குச் சான்றாக விளங்குவனவற்றுள் தொடர் உருவகமும் (allegory) ஒன்றாகும். சேரமான் கடல் ஓட்டிய வெல்கெழு குட்டுவனை ஓர் உழவனாகக் கருதிக்கொண்டு, அவனது போர்த்தொழில் வல்லமையை உழவுத் தொழிலாகப் புலவர் உருவகம் செய்துள்ளார். இந்த உருவகம் உழவுத் தொழிலோடும் போர்த்தொழிலோடும் தொடர்புடைய படைகளைக் கொண்டு, தொடர்ச்சியாக அமைக்கப்பெற்றுள்ளது.

'இருப்பு முகம் செறித்த ஏந்தெழில் மருப்பின்
கருங்கை யானை கொண்மூ வாக
நீள்மொழி மறவர் எறிவனர் உயர்த்த
வாள்மின் னாக வயங்கு கடிப்பமைந்த
குருதிப் பலிய முரசு முழக்காக
அரசராப் பனிக்கும் அணுங்குறு பொழுதின்
வெல்விசைப் புரவி வீசுவளி யாக
விசைப்புறு வல்வில் வீங்குநாண் உகைத்த
கணைத்துளி பொழிந்த கண்ணகன் கிடக்கை
ஈரச் செறுவயின் தேரேர் ஆக
விடியல் புக்கு நெடிய நீட்டிநின்
செருப்படை மிளிர்ந்த திருத்துறு பைஞ்சால்
பிடித்தெறி வெள்வேல் கணையமொடு வித்தி'

| | |
|---|---|
| யானை - மழைமுகில் | வாள் - மின்னல் |
| முரசு - இடிமுழக்கம் | குதிரை - காற்று |

அம்புகள் - மழைத்துளிகள் போர்க்களம் - வயல்
தேர் - ஏர் வேல்,கணையம் - விதைகள்

மழை பொழிவது தொடங்கி, விதைகளை விதைத்தல் முடிய உள்ள உழவுத் தொழிலோடு தொடர்புடைய கருவிகளும் நிகழ்வுகளும் முற்றிலுமாகவும் தொடர்ச்சியாகவும் இப்பாடலில் உருவகம் செய்யப்பெற்றுள்ளது.

### உவமைத்தெரிவு

ஒரு பொருளின் இயல்பினை உள்ளவாறு வெளிப்படுத்துதலிலும் பரணர் சிறந்து விளங்குகிறார். இந்த நோக்கத்திற்கு அவர் முற்றிலும் பொருத்தமுடைய பொருளை உவமையாகத் தெரிவு செய்கிறார். பேகனது (142) கொடை இயல்பினை விவரிக்கிற பாடல் ஒன்று இங்குச் சான்றாகத் தரப்பெற்றுள்ளது.

'அறுகுளத் துகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
உறுமிடத் துதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரிபோலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுதல் அல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறினே'

வரைவின்றிப் பெய்கிற மழையைப் போன்றது பேகனது கொடைமை என்பதனைப் புலவர் அழுத்தமாகத் தெரிவிக்கிறார்.

### உவமைத் தொடரில் மாற்றம்

உவமை, உருபு, பொருள் என்னும் மூன்றும் இம்முறையில் உவமைத்தொடர் ஒன்றில் அமையும். இம்மூன்றனையும் இம்முறையை மாற்றி அமைப்பதன் வாயிலாகக் கருத்துக்கு அழுத்தமான உருக்காட்சியினைத் தரவியலும். சோழன் உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியைப் புகழ்ந்து பாடும் இடத்தில் சிறந்த உருக்காட்சியைச் சுவைஞரால் காணமுடிகிறது. இப்பாடல் (4) அம்மன்னனது போர்த் தொழில் திறத்தை விவரிக்கிறது.

குருதி தோய்ந்த வாள், கேடயம், கடிவாளத்தால் குருதி வடியும் குதிரை, களிறு, சோழன் எனப் பலவும் உவமிக்கப் பெற்றுள்ளன.

'வாள்வலம் தரமறுப் பட்டன
செவ்வானத்து வனப்புப் போன்றன
தாள்களம் கொளக்கழல் பறைந்தன
கொல்லேற்றின் மருப்புப் போன்றன
..................................................................
மாவே எறிபதத்தான் இடம்காட்ட
கறுழ்பொருத செவ்வாயான்
எருத்து வவ்விய புலிபோன்றன
..................................................................
நீயே அலங்குளைப் பரீஇ இவுளிப்
பொலந்தேர் மிசைப் பொலிவு தோன்றி
மாக்கடல் நிவந்து எழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ
..................................................................'

மகட்பாற் காஞ்சி, குறுங்கலி, பாணாற்றுப்படை போன்ற துறைகளில் பிறருக்காக இரங்கும் உணர்வு மேலோங்கி நிற்கிறது. ஒரு பெண்ணின் பொருட்டு ஊருக்கும் நாட்டுக்கும் கேடு நேரிடுதல், கணவனைப் பிரிந்து தனித்து வாழும் பெண், ஏழ்மை ஆகிய காரணங்களின் அடிப்படையில் இரக்கம் வெளிப் படுகிறது. இத்துறைகளைப் பரணர் மிகுதியாகப் பாடியுள்ளார். இது அவரது இரக்க உணர்வை வெளிப்படுத்துகிறது

பரணர் தம் கருத்துக்களைத் திறம்பட வெளிப்படுத்தற்குத் தொடர் உருவகம், உவமைத் தொடரில் மாற்றம் போன்ற உத்திகளைச் செம்மையாகக் கையாண்டுள்ளார்.

# அரியகுறட்பாக்களும் உரிய பொருளும்

(முன் இதழ்த்தொடர்ச்சி) *பேரறிஞர் நா.பாலுசாமி*

கேடு - குன்றுதல் அல்லது வறிதாதல்;
உளதாகும் - நிலையாகும் அல்லது அழியாது;
சாக்காடு - இறப்பு அல்லது உடம்பு அழிதல்;

இங்ஙனம் பொருள் கொண்டால், ஒருவன் தனது பூதவுடம்பை வளர்த்துக் கொள்ளாமல் புகழுடம்பை வளர்ப்பதும், வளர்ந்த புகழுடம்பை (புகழினை) இங்கு நிறைபெறச் செய்து பூதவுடம்பை இழந்து விடுவது என்பது அனைவராலும் செய்யத்தக்க எளிய செயலன்று; அரியவற்றுள்ளும் அரிய செயலாகும். அஃதாவது அழியத்தக்க உடம்பின் வாயிலாக என்றும் அழியாது நிலைத்து நிற்கும் புகழினை அடைவது என்பது சதுரப்பாடுடையவர்க்கே இயலும் என்பதாகும். இங்குக் கூறியவற்றால் இக்குறளுக்குப் பரிமேலழகர் கண்ட உரை சாலச் சிறந்ததாகவே தோன்றுகிறது.

இனிப் பெருமை என்னும் அதிகாரத்துள் வரும் ஒரு குறட்பா ஆழ்ந்த சிந்தனைக்குரியது. அது கீழ்வருமாறு:

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர்"

இக்குறட்பாவில் கவனத்திற்கும் ஆய்வுக்கும் உரிய தொடர்கள் மேலிருத்தல், கீழிருத்தல் என்பனவாகும். இதற்குப் பரிமேலழகர் பின்வரும் உரை கண்டுள்ளார்:

**"செயற்கரிய செயகலாது சிறியராயினார் உயர்ந்த அமளி முதலியவற்றின் மிசை இருந்தாராயினும் பெரியராகார்; அவை செய்து பெரியராயினார் தாழ்ந்த வறுநிலத்து இருந்தாராயினும் சிறியராகார் என்றவாறு"**

மேலும் அவர், **"மேலிருத்தல் கீழிருத்தல்களால் செல்வு நல்குரவுகளும் மேல் கீழ்களால் பெருமை சிறுமைகளும்** கருதப்பட்டன.

**இனி மணக்குடவரும் காளிங்கரும் மேலிருத்தல் கீழிருத்தல்களுக்குச் செல்வம், வறுமை என்றே பொருள் கொண்டுள்ளார். ஈண்டு 'இருத்தல்' என்பதற்கு அமர்தல் அல்லது**

உட்காருதல் என்று பொருள்கொண்டு பரிமேலழகர் அதற்கேற்ப அமளி (உயர் ஆசனம்) என்றும் 'வறுநிலம்' அஃதாவது 'தரை' என்றும் பொருள் உரைத்தார் 'இருத்தல்' என்பதற்கு இவ்வாறு பொருள் கொள்வதினும் வீற்றிருத்தல் அல்லது மேலான பதவியில் (நிலையில்) பெருமிதத்துடன் அமர்ந்திருந்தல் என்று பொருள்கொள்வதே சாலச் சிறந்ததாகும். உயர்ந்த பதவியில் வீற்றிருந்தும் அப்பதவிக்குரிய குணமும் பண்பும் ஒழுக்கமும் நேர்மையும் திறமையும் இல்லாத ஒருவனைவிட, மிகவும் தாழ்ந்த பதவியில் அவனுக்குக் கீழ் பணியாற்றுபவன் ஒருவன் தனது பதவிக்குரிய கடமையாற்றல், கீழ்ப்படிதல், ஒழுக்கம், நேர்மை முதலிய அரிய குணங்களுடன் இருப்பானாயின் அவனே முன்னவனினும் உண்மையில் பெருமைக்குரியவர் என்பது இக்குறட்பாவின் நேரிய பொருளாகக் கருதப்படல் வேண்டும் இக்காலத்தில் பதவி ஏற்றம் உடைய ஒருவன் அதனாலேயே பெருமைக்குரியவன் என்று பொதுவாகக் கருதப்படுதலின், திருவள்ளுவர் உண்மை விளக்கம் தந்துள்ளார் எனலாம்.

திருவள்ளுவர் காலத்தும் அதற்கு முன்பும் சமுதாயத்தில் பொதுவாகக் குடிப்பிறப்பு, செல்வம், பதவி முதலியவற்றால் ஒருவன் மதிக்கப்படுவதும் அவை எல்லாம் அற்றோர் எத்துணைப் பிற சிறப்புகள் பெற்றிருப்பினும் மதிக்கப்படாத நிலையில் இருந்தனர். இது திருவள்ளுவருக்கு உடன்பாடன்று. ஆகவே, இக்குறட்பாவால் தமது கருத்தினை வலியுறுத்தியுள்ளார்.

இனி நிலையாமை என்னும் அதிகாரத்துள் வரும் ஒரு குறட்பா சிந்தனைக்கு விருந்தாகும்.

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போடு உயிரிடை நட்பு"

என்பது அது. இதற்குப் பரிமேலழகர் அரிதின் முயன்று தமது நுண்மண் நுழை புலத்தால் மிக விரிவாகவும் நுட்பமாகவும் உரைகண்டுள்ளார்.

இக்குறட்பாவும் மாறுபட்ட உரைக்கு இலக்காகி நிற்கிறது. இதற்குப் பரிமேலழகர்,

"(முன்தனியாத) முட்டை தனித்துக் கிடப்ப (அதனுள்
இருந்த) புள்ளுப் (பருவம் வந்துழிப்) பறந்துபோன

தன்மைத்து, உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பு"
என்று பொருள் கொண்டுள்ளார். இவ்வுரையுள் வரும் 'முன்தனியாத', 'அதனுள் இருந்த', 'பருவம் வந்துழி' என்ற தொடர்கள் பரிமேலழகரால் வருவித்துக் கொள்ளப் பட்டவையாகும். குறட்பாவில் இவற்றிற்கேற்ற மூலச்சொற்கள் இல்லை. இக்குறட்பாவில் வந்துள்ள 'தனித்து' என்பதானால் 'முன்தனியாத' என்பதும், 'முட்டை' என்பதனால், 'அதனுள்ளிருந்த' என்பதும், 'பறந்தற்றே' என்பதனால் 'பருவம் வந்துழி' என்பதும் ஊகித்துப் பொருத்தமுறப் பெறப்பட்டன வாகும். இது பரிமேலழகரது கூர்த்த மதிக்கு எடுத்துக்காட்டாகும்.

மேலும் விளக்கமுற்பட்ட பரிமேலழகர், "தனித்தொழிய" என்றதனால், முன்தனியாமை பெற்றோம். அஃதாவது, கருவும் தானும் ஒன்றாய்ப்பிறந்து வேறாந்துணையும் அதற்கு ஆதாரமாய் நிற்றல்;' அதனால் அஃது உடம்பிற்கு உவமையாயிற்று. அதனுள் வேற்றுமையின்றி நின்றே பின் புகாமல் போகலின் புள் உயிர்க்கு உவமையாயிற்று" என்றும், "முட்டையுட் பிறப்பன பிறவும் உளவேனும் புள்ளையே கூறினார். பறந்துபோதல் தொழிலான் உயிரோடு ஒப்புமை எய்துவது அதுவேயாகலின்," என்றும் விரித்துரைத்தார். இங்கு,

உயிர் - சேதனம், அரு, நித்தம்
உடல் - அசேதனம், உரு, அநித்தம்

இவ்வாறு இருவேறு இயல்பினவாகிய இரண்டும் கூடியிருப்பது வினைவயத்தாலல்லாது பிறிதில்லை என்பதாம். 'நட்பு' என்பது ஈண்டுக் குறிப்பு மொழியாய் அவற்றிற்கிடை யேயான 'நட்பின்மையைக்' குறித்தது.

இனிக் 'குடம்பை' என்பதற்குக் 'கூடு' என உரை கண்டவர்களும் உண்டு. மணக்குடவரும் காளிங்கரும் இவ்வாறு பொருளுரைத்தனர். இனிப்பரிதியாரோ, 'பட்சிமுட்டையிட்டு வாழ்கிற கூடும் முட்டையும் போலும் உடலும் உயிரும்; ஆகையினாலே யாக்கை உள்ளபொழுதே தன்மம் செய்வான் என்றவாறு' என்று சிறிதும் இயைபின்றித் தமக்குத் தோன்றியவாறு உரைத்துப்போயினார்.

**'குடம்பை' என்பதற்குக் 'கூடு' என்று பொருள்**

**கொண்டது எத்துணைப் பொருத்தமின்மையுடையது**

என்பதனைப் பரிமேலழகர் தருக்கமுறையில் மறுத்துள்ளமை வியத்தற்குரியதாகும், கூடு,

புள்ளுடன் தோன்றவில்லை; புள்வேறு, கூடுவேறு; இரண்டும் ஒன்றாகத் தோன்றவில்லை. ஆயின் 'முட்டை' என்று பொருள்கொள்ளின் 'முட்டையும் கருவும் (குஞ்சு)' ஒன்றாகவே தோன்றியவை. இந்நயம் உணரத்தக்கது.

கூட்டைவிட்டுப் பறந்துபோன பறவை மீண்டும் அக்கூட்டை அடையமுடியும். ஆனால் முட்டையினின்று குஞ்சு வெளிப் பட்டுவிட்டால், அது மீண்டும் முட்டையுள் புக்குக் கருவாகாது,

இவ்வேற்றுமையைப் பிற உரையாசிரியன்மார் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இக்காரணங்களால் உடம்பிற்கு உவமை ஆகாமை அறியப்படும் என்பர் பரிமேலழகர்.

அடுத்துத் தெரிந்து தெளிதல் என்னும் அதிகாரத்தில் வரும்,

"அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்
திறம் தெரிந்து தேறப்படும்"

என்னும் குறட்பா சிந்தனைக்கு உரியது. பரிமேலழகர் இக்குறட்பாவிற்குத்தான் மிகவிரிவான உரை எழுதியுள்ளார். அவர் உரை விளக்கம் வருமாறு:'

"அரசனால் தெளியப்படுவான் ஒருவன் அறமும் பொருளும் இன்பமும் உயிர்ப்பொருட்டான் வரும் அச்சமும் என்னும் உபாதை நான்கின் திறத்தான் மனஇயல்பு ஆராய்ந்தால் பின்பு தெளியப்படும் என்றவாறு" உபாதை - சோதனை. இவரது உரையுள் உரைவிளக்கம் முற்றிலும் வடநூல் முறையைத் தழுவியதாகும். திருவள்ளுவர் கருதியதற்கு மாறானதாகும். பரிமேலழகரே, 'இவ்வடநூற் பொருண்மையை உட்கொண்டு இவர் ஓதியது அறியாது பிறரெல்லாம் இதனை 'உயிரெச்சம்' எனப்பாடம் திரித்துத் தத்தமக்குத் தோன்றியவாறே உரைத்தார்' எனக் கூறியுள்ளார். வேறு சில இடங்களில் வடநூன்முடிபுகள் திருவள்ளுவர் கருத்திற்கு முரணானவை என்று துணிந்து மறுக்கும் பரிமேலழகர் இக்குறிட்பா உரையில் முழுக்க முழுக்க வடநூல்களாகிய காமந்தகம், அருத்தசாத்திரம் ஆகியவற்றில் கண்டுள்ளவற்றை மேற்கொண்டு பொருந்தா விளக்கம் தருவது புரிந்துகொள்ள இயலாத ஒன்றாக உள்ளது.

இனிக் காளிங்கர் 'உயிரெச்சம்' எனப்பாடம்கொண்டு உரைக்கும் உரையும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. உயிரெச்சம் என்பது முத்தி என்று கருதுவர் காளிங்கர். அமைச்சரைத் தேர்ந்தெடுப்பதற்கு இவ்வுபாயம் எங்ஙனம் பயன்படும் என்பது புதிராகவே உள்ளது.

மணக்குடவர் இதற்குச் சுருங்கிய அளவில் உரை செய்துள்ளார்; விளக்கம் சாலாது. ஆயின் பரிப்பெருமாள் இக்குறளுக்கு நேரிய உரை கண்டுள்ளார் எனக்கருதலாம். அது வருமாறு:'

"அறமும் பொருளும் இன்பமும் உயிரச்சமும் என்னும் நான்கினையும் கூறுபடுத்து ஆராய்ந்து பின்பு தேறப்படும் என்றவாறு.

மேற்கூறிய குற்றமும் குணமும் ஆராய்தலேயன்றி அறத்தை வேண்டியாதல், பொருளை வேண்டியாதல், இன்பத்தை வேண்டியாதல், அச்சம் உளதாம் என்றாதல் அரசன் மாட்டுத் தீமையை நினையாமையை ஆராய்ந்து பின்பு அவரைத் தேறப்படும் என்று கூறப்பட்டது." இவ்வுரை பொருத்த முடையதாகத் தோன்றுகிறது. அஃதாவது அரசன் ஒருவன் தன் அமைச்சர்களைத் தெரிவு செய்து அமைச்சரவை அமைக்கும் போது, தன்னால் தெரிவு செய்யப்படும் அவ்வமைச்சர்கள் அறம் அல்லது நேர்மை (Integrity) பொருள் மீது ஆசையின்மை (Corruption) பெண்ணாசையின்மை (Free from lust) இவற்றிற்கும் மேலாக தனது உயிரைக்காத்தலில் பற்றின்றி அரசுக்கு வரும் ஏதங்களைத் தமதாகப் பாவித்துக் கடமையாற்றுதல் (Duty even at the risk of life) என்ற இந்நான்கிலும் ஆராய்ந்து தெளியப்படல் வேண்டும். இதுவே திருவள்ளுவர் கருத்தாக இருத்தல் கூடும். இக்குறள் இக்காலத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களுக்கும் அமைச்சர்களுக்கும் எத்துணைப் பொருத்தமுடையதாகிறது என்பது அறிந்து மகிழத்தகும்.

இங்ஙனமே திருவள்ளுவர் அருளிய திருக்குறளில் பல குறட்பாக்களுக்கு அவர் கருதியிருப்பார் என்பதை நடுநிலையில் இருந்து உரைகாணவேண்டும் என்னும் உண்மை உரைகாரர்களால் உணரப்படல் வேண்டும்.'

# ஆறுமுகநாவலரின் பதிப்புப்பணி

வெ. இராமச்சந்திரன்
ஆய்வாளர், சென்னை - 88

**முன்னுரை:**

தமிழ்மொழியின் வளர்ச்சி என்பது கி.பி.19ஆம் நூற்றாண்டில் பல்வேறு பரிமானங்களில் சரியான முறையில் தொடங்கப்பட்டது என்பதனைத் தமிழ் இலக்கிய வரலாறு மெய்ப்பிக்கின்றது. ஒரு மொழியின் வளர்ச்சி பிழையின்றிப் புத்தங்களை வெளியிடுவதிலும் மக்கள் பிழையின்றிப் பேசுவதிலும் எழுதுவதிலும் அடங்கும். சிதறிக்கிடந்த தமிழ் மூலநூல்களைப் பழைய ஏட்டுச் சுவடி வடிவிலிருந்து அச்சிலேற்றி அதைப் பதிப்பித்து வெளியிட்டமைக்கு வித்திட்டவர்கள் மேலைநாட்டினர் ஆவர். இதுவே. நம் தமிழ் அறிஞர்களுக்குப் பதிப்புத்துறையிலும் அச்சுத்துறையிலும் ஈடுபடுவதற்கு ஊன்றுகோலாக அமைந்தது. அறிஞர்கள் மனத்திலும் ஏட்டுச்சுவடிகளிலும் இருந்த அரிய தமிழ்நூல்களை அச்சு வாகனம் ஏற்றி அவை செல்லுக்கிரையாகி அழிந்து போகாது காத்த பெருமை கி,பி,19-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ் அறிஞர்களையே சாரும், எனவே. பதிப்புப்பணி என்பதனைப் பதிப்புக்கலை. பதிப்புக்கொள்கை என வகைப்படுத்தலாம், ஆறுமுக நாவலருடைய பதிப்புப்பணி 19 - ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் சிறப்பாக விளங்கிற்று, அவர் பதிப்பித்த நூல்கள் மற்றைய பதிப்பாளர்களுடைய பதிப்புகளிலிருந்து முற்றிலும் வேறுப்பட்டு விளங்கியது, இத்தன்மைகளை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பதிப்புக்கலையும் பதிப்புக்கொள்கையும்:**

பதிப்புக்கலை என்பது சுவடிதேடுதல். கருத்துத் திரட்டுதல். முன்னுரை. வரலாறு. உரை சிறப்புரை ஆகியவற்றை எழுதுதல். அருஞ்சொல்லகராதி தயாரித்தல் போன்றனவாகும், இவை. இருநிலைகளைத் தன்னுள் கொண்டன் (1) மூலப்பாடத்திறனாய்வு (2) நூலைப்பதிப்பித்தல், மூலபாட ஆய்வுப்பதிப்பு வெளியிட முற்படுபவர் ஒரு நூலுக்கு எழுந்துள்ள பல பதிப்புகளையும் நன்கு ஆராய்ந்து கிடைக்கின்ற பதிப்புகளைக் கால வரிசையின்படி வகுத்துக் கொள்ளவேண்டும்.

"ஆசிரியர் உயிரோடு இருந்த காலத்தில் அவர் பார்வையிட்டு வெளிவந்த பதிப்புகள். அவர் திருத்தித்தந்த அச்சுப்படித்தாள்கள். அப்பதிப்புகளுக்குப் பயன்படுத்திய அவருடைய மூலப்பிரதிகள் திரட்டி இருப்பனவற்றுள் பழைய பதிப்பை ஆதாரப்பிரதியாகக் கொள்ள வேண்டும்" (1) என்று திரு.அ.விநாயகமூர்த்தி கூறுவது இவண் நினையத்தகும்.

எந்தநூலைப் பதிப்பித்தாலும் அதனை முழுமையாக அறிந்து கொள்ளாமல் பதிப்பித்தல் என்பது அக்காலத்தில் நடைமுறையில் இல்லை. நூலைப் பதிப்பிப்பதற்கு முன்னோடியாகச் செய்யத்தக்க பணி என்பது நூலைப் பல ஏடுகளையும் ஒப்பிட்டுப் பிழைகளைக் களைந்து சரியான பாடத்தை நிறுவுதலாகும். இதனைச் செம்பதிப்பு என்பார். மேலும். ஆராய்ச்சியாளனுக்கு மிகத் தேவைப்படும் தற்சாற்பற்ற நிலையும் உண்மையைக் காணும் விழைவும் பதிப்பாசிரியருக்கும் தேவையாகின்றது. மேற்காணும் முறையில் பதிப்புக் கொள்கையை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. எந்த நூலைப் பதிப்பிக்க எடுத்துக் கொண்டாலும் அந்த நூலின் முன்னர் அச்சிட்ட பிரதிகள் அல்லது ஓலைச்சுவடிகள் எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவையும் தேடித் தொகுத்தல்,

2. நூலைப் பற்றி முழுமையாக விளங்கிக் கொள்ளுதல்,

3. ஒரு பிரதியை ஆதாரப் பிரதியாகக் கொள்ளுதல்,

4. எவ்வளவு முயன்றும் கிடைக்காத மேற்கோள்களை "விளங்காமேற்கோள் அகராதி" அமைத்துக் குறிப்பிடுதல்,

5. ஏட்டில் உள்ளவாறே மாற்றாமல் பதிப்பித்தல்,

6. பழைய தமிழ்நூல்களும் உரைகளும் பண்டைவடிவம் குன்றாமல் இருத்தல் வேண்டும் என்று கருதி மூலப்படியில் உள்ளவாறே பதிப்பித்தல்,

7.ஒரு பதிப்பில் பிழை புகுந்துவிட்டால் அதனை நேர்மையுடன் ஏற்று மறுபதிப்பில் திருத்திக் கொள்ளும்மனப்பக்குவம்,

இந்நிலையில் டாக்டர் உ.வே.சாமிநாதய்யரின் காப்பியப் பதிப்புகளைப் பற்றி முனைவர் இரா.காசிராசன் கூறும் கீழ்க்காணும் கருத்து டாக்டர் ஐயரவர்களின்

பதிப்புக்கொள்கையைக் தெளிவுபடுத்துவதாக அமைகின்றது எனலாம். "ஐயரவர்கள் பதிப்புக்கொள்கையைப்பின்பற்றி அமைந்திருந்தாலும், தொடக்க நிலையில் ஓவ்வொரு பதிப்பை வெளியிடுகின்ற போது, பல சேர்க்கைகள், மாற்றங்களை அமைத்தவர், பின் அவர் வெளியிட்ட அனைத்து நூல்களுக்கும் ஒரு நிலையான வரையறை வகுத்துக் கொண்டார். தனக்குத் தெரியாதவற்றை நேர்மையுடன் தெரியாது என ஒப்புக்கொள்ளும் பண்பும், பதிப்புப்பணியில் ஐயரவர்கள் கொண்டுள்ளார் என்பதும் அதே நேரத்தில் தெரியாது என விட்டுவிடாமல் இயன்றவரை முயற்சி செய்து, முடியாத நிலையில் அதற்கு குறிப்புரை எழுத முடியவில்லை. (2) என்று கூறுவது அவரது பெருந்தன்மையைக் காட்டுகின்றது.

## பதிப்பாசிரியர் நாவலர்

சமகாலப் பதிப்பாளர் என்ற வகையில் ஆறுமுக நாவலர் தம் பதிப்புப் பணியின் பண்பும் சிறப்பும் எண்ணத்தக்க ஒன்று. அவர்தம் காலத்தில் சிறந்த ஆசிரியராய்ச் சைவசமய வித்தகராய், திறனார்ந்த உரையாசிரியராய் விளங்கிய தோடு நில்லாமல். ஆறுமுகநாவலர் சிறந்தபதிப்பாசிரியராகவும் திகழ்ந்தார். தமிழ்ப் பெரியார் திரு.வி.க. பதிப்பாசிரியர்களைப் பற்றிக்கூறும் போது பின்வருமாறு கருத்துரைக்கின்றார்.

"பதிப்பாசிரியர்களை நினைக்கும் போது எளிதில் நம் நினைவுக்கு வருபவர் மூவர். பழந்தமிழ் இலக்கிய வெளியீட்டுக்குக் கால் கொண்டவர் ஆறுமுகநாவலர் சுவர் எழுப்பியவர் தாமோதரம் பிள்ளை, கூரைவேய்ந்து நிலையம் கோலியவர் சாமிநாத ஐயர் (3) என்று அவரவர் செய்த பதிப்புப் பணியின் சீர்மைதனை திரு.வி.க. விதந்து கூறுகின்றார். தம் காலத்திற்குத் தேவை எவை என்பதையும் இன்றியமையாதன எவை என்பதனையும் சிந்தித்துத் தெளிந்து அவற்றைச் செயல்படுத்தியமையே நாவலரின் சிறப்புக்கும் தனித்தன்மைக்கும் அடிப்படையாகும். நாவலர் தம் காலத்தில் கிறித்துவர்கள் தமது மத போதனைகளைத் துண்டுப் பிரசுரங்கள் வாயிலாக வெளியிடுவதற்கு அவர்கள் சொந்தமாக வைத்திருந்த அச்சு இயந்திரங்கள் மிகவும் பயனுள்ளவையாக இருந்தன. அவர்களைப்

போலவே, நாவலருக்கும் சைவ சமயச் செய்திகளையும் இன்னும் பல தமிழ் நூல்களையும் புத்தகமுறையில் அச்சிலேற்றி வெளியிடுவதில் விருப்பமும் ஊக்கமும் இருந்தது. எனவே, தமது செலவில் "வித்தியாநு பாலன யந்திரசாலை" என்னும் அச்சகத்தை 1849 - ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையிலே நாவலர் அமைத்தார். இலக்கண இலக்கியப் பிழைகளும் அச்சுப்பிழைகளும் மிகுதியாய் இருந்த பதிப்புகள் வெளிவந்த காலத்தில், நாவலர் வெளியிட்ட நூல்கள் அச்சுச்சுத்தமாகவும் பிழையின்றியும் பதிப்பிக்கப்பட்டன. அதனால், நாவலர் பதிப்பு என்பது ஈழத்திலும் தமிழகத்திலும் பெயரும் புகழும் மதிப்பும் கணிப்பும் பெறலாயிற்று"

## நாவலர்தம் காலத்துப் பதிப்பின் நிலை:

நாவலர்தம் காலத்திலே தமிழ்மொழியின் நிலைமை பெருமைப்படக் கூடியதாக இருக்கவில்லை. ஏட்டுச்சுவடிகளிலே இருந்த தமிழ்நூல்கள் நல்ல ஈடுபாடும் முனைப்பும் கொண்டிருந்த தமிழ்ப் பண்டிதர்களிடமும், வித்வான்களிடமும் ஆதீனங்களிடமும் முடங்கிக்கிடந்தன. மாணவர்கள் நூல்களைக் கற்பது, மேலும் அவற்றைப் பெறுவது என்பதும் சற்றும் நினைத்துப் பார்க்க முடியாத செயல்களாக இருந்தன. தமிழில் பழைய ஏடுகளை வைத்திருந்தவர்கள், ஏட்டிலுள்ள நூல்களின் பொருளினை அறியாத போதும் அவற்றை விரும்பிக் கற்பவருக்கு அத்தமிழ் ஏடுகளைக் கொடுக்க விரும்பவில்லை. அத்தகைய தமிழ்ஏடுகளை மிகவும் முயன்று பெற்றுச் செல்பவர்களுள் சிலர் தத்தம் தமிழ் அறிவிற்கேற்றாற்போல் பிழை படுத்தியும் கொடுத்தமையால் சிலமூல ஏடுகள் பிழையான ஏடுகளாக ஆயின. மேலும், இத்தருணத்தில் கீழைத் தேசத்திற்கு வந்த கிறித்துவர்கள், அவர்கள் சமயத்தைப் பரப்பும் ஓரே நோக்கத்துடன் மதக்கருத்துகளையும் விளக்கங்களையும் துண்டுப் பிரசுரங்கள், நூல்கள் வாயிலாக அச்சிட்டு மக்களுக்குக் கொடுத்து வந்தனர். மேலும், அச்சிடப்பட்ட நூல்கள் இலக்கண இலக்கியப் பிழைகள் பலவும் கொண்டனவாகப் பதிப்பிக்கப்பட்டன.

(தொடரும்)

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பதிப்பாசிரியர். இரா. சதாசிவம்
பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். இ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆2341116